
**செப்டம்பர் – 13**

# TNPSC துளிகள்

- 2026 ஆம் ஆண்டு செப்டம்பர் 11 அன்று நீலகிரி மாவட்டம் உதகமண்டலம் (ஊட்டி) அருகே உள்ள பட்டர்ஃபையரில் (Buttfire) தமிழ்நாடு அரசின் முதல் பிரத்யேக ஸ்கேட் பூங்கா (skate park) திறக்கப்பட்டது.
- சென்னையில் உள்ள அதிகாரிகள் பயிற்சி அகாதமியில் (OTA) இந்திய ராணுவத்தில் அதிகாரியாக நியமிக்கப்பட்ட கார்கில் மாவட்டத்தின் முதல் பெண் அதிகாரி என்ற பெருமையை ஸ்டான்சின் சாங்யாங் பெற்றார்.
  - லடாக்கின் ஜான்ஸ்கர் (Zanskar) மாவட்டத்திலிருந்து இந்திய ராணுவத்தில் அதிகாரியாக நியமிக்கப்பட்ட முதல் நபரும் இவரே ஆவார்.
- அஸ்ட்ராஜெனெகாவின் (AstraZeneca) மார்பகப் புற்றுநோய் மருந்தான காமிசெஸ்ட்ரான்ட் (camizestrant - Etcamah), மேம்பட்ட ஹார்மோன்-ஏற்பி-நேர்மறை, HER2-எதிர்மறை மார்பகப் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட 1,371 நோயாளிகளை உள்ளடக்கிய ஓர் இறுதிக்கட்ட சோதனையில், முன்னேற்றமில்லா உயிர்வாழ்வை (progression-free survival) கணிசமாக மேம்படுத்துவதில் தோல்வியடைந்தது.
- ஆயுத மோதல்களின் போது கல்வியைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 9 அன்று தாக்குதலில் இருந்து கல்வியைப் பாதுகாப்பதற்கான சர்வதேச தினம் அனுசரிக்கப்படுகிறது.
  - 2026 ஆம் ஆண்டிற்கான கருத்துரு Can Education Survive Attack? The Resilience of Human Communities என்பதாகும்.
- தற்கொலையை ஒரு பொது சுகாதாரப் பிரச்சனையாக கருதி அது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும், தடுப்பு முயற்சிகளை ஊக்குவிக்கவும் ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 10 அன்று உலக தற்கொலைத் தடுப்பு தினம் அனுசரிக்கப் படுகிறது.
  - 2024–2026 ஆம் ஆண்டிற்கான கருத்துரு Changing the Narrative on Suicide மற்றும் அதன் செயல் அழைப்பு Start the Conversation என்பதாகும்.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## சங்க கால நீர் மேலாண்மை அமைப்பு





- திருச்சி மாவட்டம் லால்குடி அருகே உள்ள கூகூரில் கொள்ளிடம் ஆற்றுப்படுகையில்

வெளிப்பட்ட செங்கல் அமைப்பு, தமிழ்நாடு மாநிலத் தொல்லியல் துறையால் (TNSDA) சங்க கால நீர் மேலாண்மை அமைப்பாக அடையாளம் காணப்பட்டுள்ளது.

- ❖ இந்த அமைப்பானது பழமையான கல்லணைக்கு அருகே, கொள்ளிடத்தின் வடக்குக் கரையிலிருந்து சுமார் 100 மீ தொலைவில் அமைந்துள்ளது.
- ❖ இதன் செங்கற்கள் சுமார் 39–43 செ.மீ × 20–22 செ.மீ × 6–7 செ.மீ அளவுடையவை, இவை அரிக்கமேடு, கீழடி, மாங்குளம் மற்றும் பூம்புகாரில் காணப்பட்ட செங்கற்களைப் போலவே உள்ளன.
- ❖ இந்த அமைப்பு தடுப்பணைக்கு நிகரான பழமையான நீர் மேலாண்மை அமைப்பான 'குரம்பு' (Kurampu) உடன் தொடர்புடையதாக அறியப்படுகிறது.
- ❖ இது உள்ளாறு வழியாக கொள்ளிடத்திற்குள் காவிரி நீர் செல்வதை முறைப்படுத்த உதவியிருக்கலாம்.

## தமிழ்நாடு காவல்துறை மனிதவளம்




- ❖ மனிதவளப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யவும், காவல்துறை பணியாளர்களின் பணிச்சுமையைக் குறைக்கவும் 17 ஆண்டுகளுக்குப் பிறகு 29,108 புதிய காவல் பணியிடங்களுக்கு தமிழ்நாடு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.
- ❖ தமிழ்நாட்டின் காவலர்-பொதுமக்கள் விகிதம் 198.07-இல் (2013) இருந்து 171.98 (2024) ஆகக் குறைந்துள்ளது, அதே நேரத்தில் தேசிய விகிதம் 2024 ஆம் ஆண்டில் 194.40 ஆக அதிகரித்துள்ளது.
- ❖ இந்தக் கூடுதல் பலம் தமிழ்நாட்டின் காவலர்-பொதுமக்கள் விகிதத்தை தேசிய சராசரிக்கு மேல் கொண்டு செல்லும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- ❖ முன்னதாக, சிங்கப்பெண் சிறப்புப் படை மற்றும் போதைப்பொருள் தடுப்புச் சிறப்புப் படைக்காக 4,563 பணியிடங்கள் உருவாக்கப்பட்டன.
- ❖ செயற்கை நுண்ணறிவு (AI), டிஜிட்டல் மற்றும் தகவல் தொழில்நுட்ப உள்கட்டமைப்பு மற்றும் தொடர் கண்காணிப்பு அமைப்புகள் உள்ளிட்ட காவல்துறை நவீன மயமாக்கலுக்கு ₹212 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.
- ❖ 2026-27 ஆம் ஆண்டிற்கான காவல்துறை மானியக் கோரிக்கையின் கீழ் ₹4,477.58 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

## தெற்கு ரயில்வே மின்மயமாக்கல்

- ❖ தெற்கு ரயில்வேயின் முழுமையான 5,068 வழித்தட கிலோமீட்டர் (rkm) அகலப் பாதை

வலையமைப்பு 100% மின்மயமாக்கலை எட்டியுள்ளது.

- பம்பாய்க்கு அடுத்தபடியாக மின்சார இழுவை முறையை அறிமுகப்படுத்திய இந்தியாவின் இரண்டாவது பெருநகரமாக 1931 ஆம் ஆண்டு மே 11 அன்று மதராஸ் மாறியதிலிருந்து இந்த மின்மயமாக்கல் மைல்கல் தொடங்குகிறது.
- 1968 ஆம் ஆண்டில், சென்னை கடற்கரை மற்றும் தாம்பரம் இடையே 25 கிலோ வோல்ட் (kV) மாற்று மின்னோட்ட (AC) மின்மயமாக்கல் தொடங்கப்பட்டது.
- இது தெற்கு ரயில்வேயின் முழு அகலப் பாதை வலையமைப்பு முழுவதும் மின்மயமாக்கல் நிறைவடைந்ததைக் குறிக்கிறது.




# தேசியச் செய்திகள்

## HPV தடுப்பூசி மைல்கல்




- 2026 ஆம் ஆண்டு பிப்ரவரியில் தொடங்கப்பட்டதிலிருந்து, தேசிய HPV தடுப்பூசி

பிரச்சாரத்தின் கீழ் இந்தியா 80 லட்சத்திற்கும் (8 மில்லியன்) அதிகமான மனித பாப்பிலோமா வைரஸ் (HPV) தடுப்பூசி மருந்தளவுகளை செலுத்தியுள்ளது.

- அரசு சுகாதார நிலையங்களில் 14 வயது சிறுமிகளுக்கு பெற்றோரின் ஒப்புதலுடன் இலவச, தன்னார்வ, ஒற்றை மருந்தளவு HPV தடுப்பூசியை இந்தப் பிரச்சாரம் வழங்குகிறது.
- குஜராத், உத்தரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம் மற்றும் மிசோரம் ஆகியவை 100% பாதுகாப்பை எட்டியுள்ளன, அதே சமயம் பீகார், ஆந்திரப் பிரதேசம் மற்றும் அசாம் ஆகியவை 90% ஐக் கடந்துள்ளன.
- 22 லட்சத்திற்கும் அதிகமான வளரிளம் பெண்களுக்கு தடுப்பூசி செலுத்தி உத்தரப் பிரதேசம் அதிக எண்ணிக்கையை பதிவு செய்துள்ளது.
- தடுப்பூசி சென்றடைவதைக் கண்காணிக்கவும், இடைவெளிகளைக் கண்டறியவும் மற்றும் விடுபட்ட பயனாளிகளைக் கண்டறியவும் U-WIN டிஜிட்டல் தளம் பயன்படுத்தப்படுகிறது.

## FASTag-இன் ஒன் டேக் (One Tag) முறை




- பயனர்கள் தங்களது FASTag அட்டையை மாற்றாமலேயே அதை வழங்கும் வங்கியை மாற்றுவதற்கு அனுமதிக்கும் ஒன் டேக் (One Tag) முறையை, மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் 2026 ஆம் ஆண்டு செப்டம்பர் 11 அன்று மும்பையில் நடைபெற்ற உலகளாவிய ஃபின்டெக் ஃபெஸ்ட் 2026-இல் தொடங்கி வைத்தார்.
- அலைபேசி எண் பெயர்வுத்திறனைப் போலவே செயல்படும் இந்த ஒன் டேக் முறை, பயனர்கள் தங்கள் FASTag-ஐ டிஜிட்டல் முறையில் புதிய வங்கிக்கு மாற்ற அனுமதிக்கிறது.
- பயனர்கள் 'ராஜ்மார்க் யாத்ரா' (Rajmarg Yatra) அலைபேசி செயலி மூலம் புதிய வங்கிக் கணக்குடன் இணைப்பதன் வழியாக தங்களின் தற்போதைய FASTag-ஐ மாற்றிக்கொள்ள அனுமதிக்கிறது.
- சுங்கக் கட்டணங்களை தானாகவே கழிப்பதற்கு FASTag ரேடியோ அலைவரிசை

அடையாள (RFID) தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துகிறது.

- சுமார் 13 கோடி FASTag-கள் வழங்கப்பட்டுள்ளன, மேலும் தேசிய நெடுஞ்சாலைப் பயனர் கட்டணங்களில் 98%-க்கும் மேலாக டிஜிட்டல் சுங்கக் கட்டண வசூல் உள்ளடக்கியுள்ளது.

## உலகளாவிய 6G வலையமைப்பு முன்னெடுப்பு

- வெளிப்படையான, இயங்கக்கூடிய, பாதுகாப்பான மற்றும் மீள்திறன் கொண்ட 6G வலையமைப்புகளை மேம்படுத்துவதற்காக ஒத்த சிந்தனையுள்ள 24 நாடுகளுடன் இணைந்து, 2026 ஆம் ஆண்டு செப்டம்பர் 9 அன்று 6G தலைமை மற்றும் பாதுகாப்பிற்கான செயல் அழைப்புக்கு இந்தியா ஒப்புதல் அளித்தது.
- அமெரிக்காவின் வட கரோலினாவில் நடைபெற்ற G20 புத்தாக்க அமைச்சர்கள் கூட்டத்தின் ஒரு பகுதியாக இந்த முன்னெடுப்பு அறிவிக்கப்பட்டது.
- அரசு முகமைகள், தொழில்துறை மற்றும் கல்வியாளர்களுடன் இந்தியாவின் பங்களிப்பை தொலைத்தொடர்புத் துறை (DoT) ஒருங்கிணைக்கும்.
- உலகளாவிய 6G தரநிலைகள் மற்றும் காப்புரிமைகளில் 10% பங்களிக்கவும், பாரத் 6G தொலைநோக்கு மற்றும் பாரத் 6G கூட்டணி ஆகியவற்றை கட்டமைக்கவும் இந்தியா இலக்கு வைத்துள்ளது.
- இந்த முன்னெடுப்பானது 6G ஆராய்ச்சி, இணையப் பாதுகாப்பு, மீள்திறன் கொண்ட விநியோகச் சங்கிலிகள் மற்றும் உலகளாவிய 6G தரநிலைகளில் கவனம் செலுத்துகிறது.




# சர்வதேசச் செய்திகள்

## வங்காளதேசத்தில் தட்டம்மை பரவல்

- 2026 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் இருந்து சந்தேகிக்கப்படும் மற்றும் உறுதிப்படுத்தப்பட்ட 999 தட்டம்மை தொடர்பான இறப்புகளுடன், வங்காளதேசம் தனது வரலாற்றில் மிகவும் மோசமான தட்டம்மை பாதிப்பை எதிர்கொண்டு வருகிறது.

- 166,000 க்கும் மேற்பட்ட சந்தேகத்திற்குரிய நோய் பாதிப்புகளும் 19,835 ஆய்வகத்தால் உறுதிப்படுத்தப்பட்ட நோய் பாதிப்புகளும் பதிவாகியுள்ளன, அதே நேரத்தில் 146,000-க்கும் மேற்பட்ட நோயாளிகள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.
- 2024-2025 ஆம் ஆண்டில் வழக்கமான தடுப்பூசி செலுத்துவதில் ஏற்பட்ட இடைவெளிகள் மற்றும் தடுப்பூசி விநியோக சிக்கல்களுடன் இந்த நோய் பரவல் தொடர்புடையதாக அறியப்படுகிறது.
- அவசரகால தட்டம்மை-ரூபெல்லா தடுப்பூசி பிரச்சாரம் 6 மாதங்கள் முதல் 5 வயதிற்குட்பட்ட சுமார் 18 மில்லியன் குழந்தைகளை இலக்காகக் கொண்டது, இதில் 19.7 மில்லியனுக்கும் அதிகமான குழந்தைகளுக்கு தடுப்பூசி போடப்பட்டது.
- தட்டம்மை என்பது தடுப்பூசி மூலம் தடுக்கக்கூடிய, மிக எளிதில் பரவக்கூடிய ஒரு வைரஸ் நோயாகும்.




# மாநிலச் செய்திகள்

## முதியோர் சூழல் சார்ந்த அலுவலகச் சான்றிதழ் - கேரளா


- பொது அலுவலகங்கள் மற்றும் நிறுவனங்கள் மூத்த குடிமக்களுக்கு அணுகக்கூடியதாகவும் வசதியானதாகவும் உள்ளதா என்பதை மதிப்பிடுவதற்காக முதியோர் சூழல் சார்ந்த அலுவலக சான்றிதழ் (EFOC) திட்டத்தை கேரளா அறிமுகப்படுத்தியது.
- உடல் ரீதியான அணுகல், சேவை வழங்கல், ஊழியர்களின் நடத்தை, தகவல் தொடர்பு மற்றும் மூத்த குடிமக்கள் பங்கேற்பு ஆகியவற்றை உள்ளடக்கிய EFOC, இந்தியாவில் இத்தகைய முதல் அரசு சான்றிதழ் அமைப்பாகும்.
- படிக்கட்டுகள் இல்லாத அணுகல், தரைத்தளக் கழிப்பறை, மூத்த குடிமக்களுக்கான முன்னுரிமை வரிசை மற்றும் அவர்களின் தேவைகளை நிவர்த்தி செய்ய ஒரு நியமிக்கப்பட்ட அதிகாரி ஆகியவை கட்டாய வசதிகளில் அடங்கும்.
- முதல் ஆறு மாதங்களில் ஒரு சோதனைத் திட்டத்திற்காக ஒவ்வொரு மாவட்டத்திலும் தலா ஒன்று வீதம் 14 அலுவலகங்கள் தேர்ந்தெடுக்கப்படும்; பின்னர் இது கிராம, தாலுகா மற்றும் பிற அரசு அலுவலகங்களுக்கு விரிவுபடுத்தப்படும்.
- இந்தியாவிலேயே மிக வேகமாக முதியோர் மக்கள் தொகை அதிகரித்து வரும்

மாநிலமாக கேரளா திகழ்கிறது; 2021 ஆம் ஆண்டில் அதன் மக்கள் தொகையில் சுமார் 16.5% பேர் 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் ஆவர், இது 2031 ஆம் ஆண்டிற்குள் 20.9% ஆக உயரும் என்று கணிக்கப்பட்டுள்ளது.




## பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

### யுனெஸ்கோ சர்வதேச எழுத்தறிவு விருதுகள் 2026




- எழுத்தறிவை மேம்படுத்துவதற்கான பங்களிப்பிற்காக ஆறு நாடுகளைச் சேர்ந்த ஆறு எழுத்தறிவு முயற்சிகளுக்கு யுனெஸ்கோ 2026 ஆம் ஆண்டிற்கான சர்வதேச எழுத்தறிவு விருதுகளை வழங்கியது.
- பன்மொழி மற்றும் தாய்மொழி அடிப்படையிலான எழுத்தறிவை ஊக்குவிப்பதற்காக கொலம்பியா, நெதர்லாந்து மற்றும் நைஜீரியா ஆகிய நாடுகளின் முயற்சிகளுக்கு யுனெஸ்கோ கிங் செஜோங் எழுத்தறிவு விருது வழங்கப்பட்டது.
- இடம்பெயர்ந்த இளைஞர்கள், சமூக எழுத்தறிவு மற்றும் பன்மொழிக் கற்றல் ஆகியவற்றில் கவனம் செலுத்துவதற்காக லெபனான், மெக்சிகோ மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளின் முயற்சிகளுக்கு எழுத்தறிவிற்கான யுனெஸ்கோ கன்பூசியஸ் விருது வழங்கப்பட்டது.

- ஆறு பரிசு பெற்றவர்கள் ஒவ்வொருவரும் எழுத்தறிவிற்கான தங்களின் பங்களிப்பிற்காக 30,000 அமெரிக்க டாலர்கள், ஒரு பதக்கம் மற்றும் ஒரு பட்டயத்தைப் பெறுகின்றனர்.
- இந்த விருதுகள் 1967 ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகின்றன.

## சாலமன் பாப்பையா மறைவு

- மூத்த தமிழறிஞரும், பேச்சாளருமான சாலமன் பாப்பையா தனது 90 வயதில் காலமானார்.
- அவர் 1961 முதல் 1994 ஆம் ஆண்டு வரை மதுரையில் உள்ள அமெரிக்கன் கல்லூரியில் பணியாற்றினார் மற்றும் அதன் தமிழ்த்துறைத் தலைவராகவும் பதவி வகித்தார்.
- இவரது தலைமையில், 1986 ஆம் ஆண்டில் இளங்கலை தமிழ் திட்டம் முதுகலைத் துறையாக தரம் உயர்த்தப்பட்டது.
- பட்டிமன்றங்களுக்காக பரவலாக அறியப்பட்ட இவர், தமிழ் இலக்கியம் மற்றும் பண்பாட்டை வளர்க்கும் விதமாக 12,000 க்கும் மேற்பட்ட பட்டிமன்றங்களை நடத்தியுள்ளார்.
- இலக்கியம் மற்றும் கல்விக்கான பங்களிப்புகளுக்காக 2000 ஆம் ஆண்டில் கலைமாமணி விருதையும், 2021 ஆம் ஆண்டில் பத்மஸ்ரீ விருதையும் பெற்றார்.




## இந்தியாவின் பிரிக்ஸ் ஷெர்பா 2026 - சுதாகர் தலேலா


- 2026 ஆம் ஆண்டில் பிரிக்ஸ் (BRICS) அமைப்பின் தலைமைப் பொறுப்பை இந்தியா வகிப்பதால், இந்திய வெளியுறவுத்துறைப் பணி (IFS) அதிகாரியான சுதாகர் தலேலா இந்தியாவின் பிரிக்ஸ் ஷெர்பாவாக நியமிக்கப்பட்டுள்ளார்.
- அவர் தற்போது வெளியுறவு அமைச்சகத்தின் (MEA) செயலாளராக (பொருளாதார உறவுகள்) உள்ளார் மற்றும் பிரிக்ஸ் அமைப்பிற்குள் இந்தியாவின் நிலைப்பாடு, பேச்சுவார்த்தைகள் மற்றும் உச்சிமாநாட்டிற்கான தயாரிப்புகளை ஒருங்கிணைக்கிறார்.
- அவர் முன்பு பூட்டானுக்கான இந்தியத் தூதராகவும், வாஷிங்டன் டி.சியில் துணைத் தூதரகத் தலைவராகவும், சிகாகோவில் துணைத் தூதராகவும் பணியாற்றியுள்ளார்.

- பிரிக்ஸ் ஷெர்பா என்பது பிரிக்ஸ் உச்சிமாநாடுகளுக்கு முந்தைய இராஜதந்திர தயாரிப்புகள், பேச்சுவார்த்தைகள் மற்றும் ஒருமித்த கருத்து உருவாக்கம் ஆகியவற்றில் உறுப்பு நாட்டைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மூத்த அதிகாரி ஆவார்.
- இந்தியாவின் 2026 பிரிக்ஸ் தலைமைத்துவத்திற்கான முதல் ஷெர்பா/துணை-ஷெர்பா (Sous-Sherpa) கூட்டம் 2026 ஆம் ஆண்டு பிப்ரவரியில் புது தில்லியில் நடைபெற்றது, இதில் தலெலா இந்தியாவின் ஷெர்பாவாக செயல்பட்டார்.
- பிரிக்ஸ் தலைவர் என்பது சுழற்சி முறையிலான தலைமைப் பொறுப்பைக் கொண்டுள்ள நாட்டை குறிக்கிறது, அதே சமயம் ஷெர்பா என்பது தனிப்பட்ட உறுப்பு நாட்டைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மூத்த அதிகாரியை குறிக்கிறது.




# முக்கிய தினங்கள்

## தேசிய புளூரோசிஸ் தினம் 2026 - செப்டம்பர் 09




- புளூரோசிஸை (fluorosis) தடுப்பதிலும் கட்டுப்படுத்துவதிலும் கவனம் செலுத்துவதை இந்த நாள் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- முக்கியமாக அசுத்தமான குடிநீர் மூலம் நீண்ட காலமாக அதிகப்படியான புளூரைடை உட்கொள்வதால் புளூரோசிஸ் ஏற்படுகிறது.
- அதிக புளூரைடு வெளிப்பாடு பற்கள், எலும்புகள் மற்றும் மூட்டுகளை பாதிக்கும்.
- குடிநீரில் புளூரைடின் பாதுகாப்பான அளவாக இந்திய தரநிலை பணியகம் (BIS)

லிட்டருக்கு 1–1.5 மில்லிகிராம் (mg/L) என நிர்ணயித்துள்ளது.

❖ புளூரோசிஸைக் கண்காணித்தல், தடுத்தல், முன்கூட்டியே கண்டறிதல் மற்றும் நிர்வகித்தல் ஆகிய பணிகளை புளூரோசிஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டுக்கான தேசிய திட்டம் (NPPCF) மேற்கொண்டு வருகிறது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★